26th July 1962]

Irrigation schemes (Tiruchirappalli district)

*687 *Q*.—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) the present stage of the following irrigation schemes in Tiruchirappalli district :—

(1) the Noyyal Reservoir Scheme ;

(2) the Kodaganar Scheme;

(3) Anicut across the Ayyar in Kolli hills ;

(4) Reservoir across the Vallar; and

(5) the Marudayar Scheme ;

(*b*) whether the above schemes would be completed during the Third Plan period ; and

(*c*) the amount provided for them in the Third Plan?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) It has been found not feasible to include these schemes in the Third Five-Year Plan.

(*b*) & (*c*) Do not arise.

திரு. மீ. கலியாணசுந்தரம் : மூன்றாவது திட்டத்தில் சேர்க்கப் படாத பல சிறிய பாசனத் திட்டங்கள் மற்ற ஜில்லாக்களில் சேர்க் கப்பட்டிருக்கின்றன. அப்படி இருக்கும்போது திருச்சி ஜில்லா வில் மட்டும் ஒரு திட்டங்கூட எடுத்துக்கொள்ளப்படாததற்குக் காரணம் என்ன ?

கனம் திரு. வி. ராமையா : சென்னை ராஜ்யத்தைப் பொறுத்த வரை மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் எந்தெந்தப் பாசனத் திட்டங்களை எடுத்துக் கொள்வது என்ற முடிவைப் பற்றி மானியக் கோரிக்கையின் விவாதத்தின்போது எடுத்துச் சொல்லி யிருக்கிறேன். திருச்சி ஜில்லாவைப் பொறுத்தமட்டில் பல திட்டங்கள் காவேரி சம்பந்தப்பட்ட திட்டங்களாக இருக்கும் காரணத்தால் பிளானிங் கமிஷன் அங்கீகாரம் கொடுத்த பிறகு தான் அவற்றை எடுத்துக்கொள்ள முடியும். இப்போது அந்தத் திட்டங்களுக்கான 'இன்வெஸ்டிகேஷன்ஸ்' நடத்திருந்தாலும் காவேரி சம்பந்தப்பட்ட திட்டங்களாக இருக்கும் காரணத்தால் பிளானிங் கமிஷன் முடிவை எடுத்த பிறகுதான் நாம் முடிவு செய்ய முடியும்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : நான் கேட்டிருப்பது ஐந்து திட்டங்களைக் குறித்து அதில் நொய்யாறு, ஐயாறு திட்டங்கள் தவிர மற்றவை காவேரி சம்பந்தப்பட்டவையல்ல. குடகனாறு, வள்ளாறு, மருதையாறு ஆகியவற்றுக்கும் காவேரிக்கும் சம்பந்தம் கிடையாது. மருதையாறு ரெயில்வேக்கு சம்பந்தப்பட்டதாக இருப்பதால் ரயில்வே பாதுகாப்பை உத்தேசித்து அந்தத் திட்டம் எடுத்துக் கொள்ளப்படுமா ?

கனம் திரு. வி. ராமையா : இந்த ஐந்து திட்டங்களில் வள்ளாறு வேண்டுமானால் காவேரி சம்பந்தம் இல்லாத திட்டம் என்று சொல்லலாம். அந்த வள்ளாறு திட்டத்தைப் பொறுத்தவரை

நாம் செலவு செய்வதற்குத் தகுந்த முறையில் பலன் தருமா என்று ஆராய்ந்து பார்க்கும்போது இன்றைக்கு இருக்கக்கூடிய இன்வெஸ்டிகேஷன் பிரகாரம் அந்தத் திட்டத்தை இப்போது எடுத்துக் கொள்ள சாத்தியம் இல்லை. தொடர்ந்து பரிசீலனை செய்து பார்த்த பிறகு அது பலன் தரக்கூடிய திட்டமாக அமைய முடியும் என்றால் அதைச் சிறு பாசனத்திட்ட அடிப்படையில் உருவாக்க முடியும். மற்ற திட்டங்கள் அத்தனையும் காவேரி சம்பந்தப்பட்ட திட்டங்கள்.

மக்களின் சராசரி வருமானம் (தனி நபர் வருமானம்)

*688 கேள்வி.—திரு. ஜே. மாதா கவுடர்: கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நம் மாநிலத்தில் இரண்டாம் ஐந்தாண்டு திட்ட கால ஆரம்பத்தில் மக்களின் சராசரி வருமானம் எவ்வளவு?

(இ) மூன்றாம் ஐந்தாண்டு திட்ட கால ஆரம்பத்தில் சராசரி வருமானம் எவ்வளவு?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (அ)&(இ) The per capita income for the Madras State at the beginning of the Second Five-Year Plan, i.e., during 1956–57 was Rs. 289 at current prices. The per capita income at the beginning of the Third Plan, i.e., during 1961–62 has not been worked out.

ஆசிரியர் பயிற்சி (பல்லாவரம்).

*689 கேள்வி.—திரு. முனு ஆதி: கனம் நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1959-ம் ஆண்டு பல்லாவரத்தில் பிரிட்டிஷ் கவுன்சில் மூலமாக இங்கிலாந்திலிருந்து புரபஸர்களை வரவழைத்து ஆங்கிலம் எப்படி போதிக்க வேண்டுமென்று ஆசிரியர்களுக்குக் கற்றுக் கொடுக்க ஆரம்பித்த சென்டரில் இதுவரை எத்தனை ஆசிரியர்கள் பயிற்சி பெற்றிருக்கிறார்கள்?

(இ) அந்தப் பயிற்சியின் கால அளவு என்ன?

(உ) அதற்கான ஆசிரியர்கள் எந்த யோக்யதாம்சத்தின் பேரில் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்?

(எ) அவர்களுக்கு ஏதேனும் Stipend தரப்படுகிறதா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (அ) Eight hundred and thirty-five Sir.

(இ) Three weeks.

(உ) The teachers should be graduates and working in high schools or training schools.

(எ) No, Sir. The trainees are paid travelling allowance according to Madras Travelling Allowance Rules and daily allowance of not less than Rs. 4 during the training period.